# பரோடா வங்கியின் லாபம் ரூ. 17,789 கோடி; வாகனம், வீடு, கல்விக்கடன் வழங்கியது அதிகரிப்பு

## நிர்வாக இயக்குனர் தேபதத்தா சந்த் தகவல்

சென்னை, மே 11–

நடப்பு ஆண்டு மார்ச் 31ந் தேதியுடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் நிதியாண்டுக்கான நிதி முடிவுகளை பேங்க் ஆப் பரோடா நிர்வாக இயக்குனரும் தலைமை எக்சிகியூடிவ் அதிகாரியுமான தேபதத்தா சந்த் அறிவித்தார். இவ்வங்கி நடப்பு நிதியாண்டில் நிகர லாபத்தில் 26.1% வளர்ச்சி பெற்று ரூ. 17,789 கோடியாக லாபம் உயர்ந்துள்ளது. உலகளாவிய வணிகம் 11.2% வளர்ச்சியடைந்து நடப்பு ஆண்டு மார்ச் 31ந் தேதி நிலவரப்படி ரூ.24,17,464 கோடியை எட்டியது.

நடப்பு ஆண்டில் 4வது காலாண்டில் நிகர லாபம் ரூ.4,886 கோடியாக ஆண்டு வளர்ச்சி 2.3% ஆக உயர்ந்துள்ளது. சொத்துகளின் மீதான வருமானம் அதிகரித்துள்ளது என்றார்.

4வது காலாண்டில் மொத்த வாராக்கடன் 3.79%லிருந்து 2.92% ஆகக் குறைப்பதன் மூலம் பேங்க் ஆஃப் பரோடா அதன் சொத்துத் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது.



4வது காலாண்டில் வாராக்கடன் 0.89% ஆக இருந்து ஆண்டுக்கு 0.68% ஆக குறைக்கப்பட்டது.

இந்த வங்கி குளோபல் அட்வான்ஸ்கள் வலுவான சில்லறை கடன் வளர்ச்சியின் காரணமாக 4வது காலாண்டில் 12.5% ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தன. வாகனக் கடன் (23.8%), வீட்டுக் கடன் (14.1%), த னி நபர் கடன் (51.6%), அடமானக் கடன் (11.4%), கல்விக் கடன் (19.6%) போன்ற பிரிவுகளில் வலுவான வளர்ச்சியால் சிறப்பாக செயல்பட்டுள்ளது.

### வணிக செயல்திறன்

வங்கியின் உலகளாவிய கடன் வழங்கியது ரூ.10,90,506 கோடி, 12.5% ஆண்டுக்கு அதிகரித்தது. உலகளாவிய வைப்புத்தொகை ஆண்டுக்கு 10.2% அதிகரித்து 13,26,958 கோடி ரூபாயாக உள்ளது. உள்நாட்டு வைப்புத்தொகை 7.7% அதிகரித்து ரூ.11,28,514 கோடியாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# அண்ணா பல்கலைக்கழகத் தேர்வு: தேர்ச்சி விகிதத்தில் 14 வது இடத்தில் அக்னி தொழில்நுட்ப கல்லூரி

சென்னை, மே 11–

அண்ணா பல்கலைக்கழக தேர்வுகளில், தமிழ்நாட்டின் 350 க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இடையே தேர்வு தேர்ச்சி விகிதத்தில் 14வது இடத்தை, அக்னி தொழில்நுட்ப கல்லூரி பெற்றுள்ளது. இந்த அளப்பரிய சாதனை குறித்த தகவல், TNEA 2024 பொறியியல் படிப்பு சேர்க்கை இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது மாநிலத்தின் முன்னணி தொழில்நுட்ப கல்வி நிறுவனமாக அக்னி தொழில்நுட்ப கல்லூரி திகழ்கிறது என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.




தரமான கல்வியாலும் மாணவர்களை மையப்படுத்திய கற்பித்தல் முறைகளாலும் அக்னி தொழில்நுட்ப கல்லூரி, மாணவர்களின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு உகந்த சூழலை நல்கிட தொடர்ந்து அயராது பாடுபட்டு வருகிறது. இந்த கல்வி நிறுவனத்தின் ஊக்கமும் ஆக்கமும் கொண்ட பயிற்றுவிப்பாளர்களும் முழு ஈடுபாட்டுடன் பணியாற்றும் ஊழியர்களும் மாணவ மணிகளின் திறமைகளைக் கண்டறிந்து அவற்றை வளர்த்திடவும் தங்கள் உத்யோக வாழ்வில் சவால்களை சந்திக்க ஆயத்தப்படுத்திக் கொள்ளவும் உறுதுணை புரிந்து வருகின்றனர்.

அக்னி தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் ஸ்ரீநிவாசன் ஆளவந்தார் கூறியதாவது:–

"எமது மாணவர்களின் கடின உழைப்பாலும் பயிற்றுவிப்பாளர்களின் அயராத அர்ப்பணிப்பாலும் விளைந்த இந்த சாதனை எங்களுக்கு மிகுந்த பெருமையையும் பெருமிதத்தையும் அளிக்கிறது" என்றார். அவர் மேலும் கூறுகையில் "கல்வியில் சிறந்து விளங்கி மகத்துவத்தை அடைதல் மற்றும் மாணவமணிகளின் வெற்றி ஆகியவற்றில் எமக்கு உள்ள தன்னிகரற்ற ஈடுபாட்டுக்கு அத்தாட்சியாக 14வது இடம் திகழ்கிறது எனலாம்" என்றார்.

அக்னி தொழில்நுட்ப கல்லூரி, புத்தாக்கங்களை உருவாக்குதல், துறை சார்ந்த அடுத்த தலைமுறை வல்லுநர்களை வளர்த்தெடுத்தல் ஆகிய தமது செயல்பாடுகளால் தொடர்ந்து பொறியியல் கல்வியில் உயர் தரங்களை தொடர்ச்சியாக அமைத்து வருகிறது. வருங்காலம் குறித்த தொலைநோக்கில் இருப்பதாலேயே தரமான கல்வியை வழங்கி மாணவர்கள் அவர்கள் தேர்ந்தெடுத்த துறையில் சிகரங்களை எட்ட வேண்டும் என்ற குறிக்கோளை இந்தக் கல்லூரி நிறைவேற்றி வருகிறது.

உன்னதமான உயர் கல்வியைப் பெற்று பொறியாளராக வாழ்வில் மிளிர வேண்டும் என்று விரும்புகிற இளம் தலைமுறையினருக்கு முழுமையான கற்றல் அனுபவத்துடன் மாறி சவால்களையும் வாய்ப்புகளையும் எதிர்கொள்ள ஆயத்தப்படுத்தும் உயர்கல்வி மகத்துவத்தின் சின்னமாக அக்னி தொழில்நுட்ப கல்லூரி விளங்குகிறது என்றார்.

# 10–ம் வகுப்பு பொதுத்தேர்வில் ஜெயப்பிரியா வித்யாலயா பள்ளி சாதனை

விருத்தாசலம், மே 11–

விருத்தாசலம் ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக் குழுமத்தைச் சேர்ந்த மாணவ மாணவிகள் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சியும், 496, 493, 492 என மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் தொடர் சாதனை படைத்துள்ளனர்.

திருப்பயர் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜனனி 496 மதிப்பெண்களும், கோபாலபுரம் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவி சாதனா 493 மதிப்பெண்களும், தொழுதூர் கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி சிவஸ்ரீ 492 மதிப்பெண்களும், பெற்று மாபெரும் சாதனை செய்துள்ளனர்.

மேலும், 490 மதிபெண்களுக்கு மேல் 3 மாணவர்களும், 480 க்கு மேல் 22 மாணவர்களும், 470 க்கு மேல் 36 மாணவர்களும், 460 மேல் 60 மாணவர்களும், 450க்கு மேல் 74 மாணவர்களும், 400 மதிப்பெண்களுக்கும் அதிகமாக 135 மாணவர்களும் பெற்று சாதனை செய்துள்ளனர்.



இதில் பாடவாரியாக தமிழில் 12 மாணவர்கள் 99/100 மதிப்பெண்கள், ஆங்கிலத்தில் 8 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள், கணிதத்தில் 51 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள், அறிவியல் பாடத்தில் 18 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள், சமூக அறிவியல் பாடத்தில் 18 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றும், மகத்தான சாதனை படைத்து, பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களையும், அதிக மதிப்பெண்கள் பெற்று, பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக் குழுமங்களில் நிறுவனத் தலைவர் சி.ஆர். ஜெய்சங்கர், இயக்குநர் என்.எஸ். தினேஷ், வடக்குத்து ஜெயப்பிரியா பப்ளிக் பள்ளியின் செயலாளர் சிந்து, திருப்பயர் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ரேவதி, கோபாலபுரம் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் சுதர்சனா, தொழுதூர் கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் மகேஸ்வரி, வடலூர் ஜெயப்பிரியா திரிபுநேனி வித்யாலயா மெட்ரிக் பள்ளி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி, வடக்குத்து ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் சிதம்பரி, மற்றும் பள்ளியின் அனைத்து ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு லயன் கே. முத்து ஊக்கத்தொகை வழங்கி பாராட்டு

காஞ்சிபுரம், மே 11–

கேரள மாநிலம் கொச்சியில் நடைபெற்ற தேசிய அளவிலான 13 மாநிலங்கள் கலந்து கொண்ட சிலம்பம் போட்டியில் தமிழ்நாடு சார்பில் போட்டியிட்டு தங்கம் மற்றும் வெள்ளி பதக்கம் வென்ற காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாணவர்களை காஞ்சிபுரத்தில் இந்து மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் லயன் டாக்டர்.கே.முத்து காந்தி ரோட்டில் உள்ள தனது மாநில அலுவலகத்திற்கு வரவழைத்து பாராட்டி, சால்வை அணிவித்து, ஊக்கத்தொகையாக ரூ.6000 வழங்கினார்.



இந்த நிகழ்ச்சியில் இந்து மக்கள் கட்சி நகர பொதுச்செயலாளர் விஷால், படப்பை விஷ்ணு நகரில் செயல்பட்டு வரும் பிரபஞ்சம் தற்காப்பு கலை பயிற்சி கழக நிறுவனரும் தலைமை பயிற்சியாளருமான சந்தனமணிகுமார் மற்றும் சிலம்பம் பயிற்சியாளரும், தேசிய சிலம்பம் நடுவருமான நிவேதா மற்றும் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகள் மோனிஷ்வர், பரணிதரன், விஷ்ணு பிரியா, தேவதர்ஷினி, கீர்த்தனா, பொன்னி, நித்திஷ் ராஜ், நித்தின் ஸ்ரீ, ரித்விக், குணாளன், சந்தோஷ், தமிழரசன், தரணி, அஸ்வத், ஸ்ரீஜித்பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் தங்கம், வெள்ளி, பத்தகங்களை வென்று முதல் இரண்டு இடம் பிடித்த மாணவ–மாணவிகள் மலேசியாவில் ஜூன் 28ந்தேதி நடைபெறும் உலகளாவிய போட்டிக்கு தேர்வாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் முதலாக தமிழ்நாட்டில் இருந்து காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் இருந்து எட்டு மாணவர்கள் ஜூலை 10ந் தேதி முதல் ஜூலை 14ந் தேதி வரை உலகளாவிய அளவில் சிங்கப்பூரில் நடைபெறும் கராத்தே சிறப்பு பயிற்சி முகாமில் கலந்து கொள்ள தேர்வாகி உள்ளனர்.

# தமிழ்நாடு திருக்கோவில் தொழிலாளர் யூனியனின் திருவான்மியூர் கிளை துவக்க விழா ஆலோசனைக் கூட்டம்

சென்னை, மே 11–

தமிழ்நாடு திருக்கோவில் தொழிலாளர் யூனியனின் 8வது கிளையாக திருவான்மியூர் – வேளச்சேரி கிளை துவக்கதிற்கான ஆலோசனைக் கூட்டம் திருவான்மியூர் பாம்பன் சுவாமிகள் திருக்கோயில் வளாகத்தில் மேலாளர் திருநாவுக்கரசு தலைமையில் தண்டீஸ்வரர் திருக்கோயில் மேலாளர் விநாயக முன்னிலையில் நடைபெற்றது. அஷ்டலட்சுமி திருக்கோவில் மேலாளர் சாரதி வரவேற்புரை ஆற்றினார்.



இக்கூட்டத்தில் கௌரவத் தலைவர் வேலாயுதம், சென்னை கோட்ட தலைவர் எஸ்.தனசேகர், மாநில மகளிர் அணி செயலாளர் செந்தமிழ்செல்வி, கொள்கை பரப்பு செயலாளர் கா.வெங்கடேசன், பொருளாளர் து.தனசேகர், அமைப்பாளர் சிவகாமி சுந்தரி துணைத் தலைவர் வியாசர்பாடி கே.மனோதரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

25 ஆம் தேதி சனிக்கிழமை 8வது கிளை துவக்க விழா பாம்பன் சுவாமி திருக்கோயிலில் நடைபெறும் என தீ ர் மா னி க் க ப் ப ட் ட து . விழாவில் சென்னை மண்டலம் முழுவதும் இருந்தும் நூற்றுக்கணக்கான திருக்கோயில் பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.


## SHARE CERTIFICATE LOSS

Notice is hereby given that Mrs.Saramma Alexander , holder of 2327 equity shares of face valueRs.2/- as per details given hereunder:

| Folio No | Certificate no | Distinctive nos From | Distinctive nos To | No of shares |
|---|---|---|---|---|
| 0000169 | 879144 | 5151941 | 5152890 | 950 |
| 0000169 | 884672 | 364287142 | 364287521 | 380 |
| 0000169 | 900105 | 366755138 | 366756134 | 997 |

The Members of public are hereby informed that I have made an application to the company for issue of the duplicate share certificate. Any person who has objection or has any adverse claim may intimate the company with valid documents within 15 days from the date of publication of this notice at its registered office at M/s CG House,6th Floor, Dr.Annie Besant Road, Worli, Mumbai, o400030. The company will proceed to issue duplicate certificate for the above referred equity shares if no valid objection is lodged with the company within the aforesaid period.

Name : **Saramma Alexander,** Address: No.54(Old No.47) Palayakaran Street,Kodambakkam,Chennai 600024

**Date : 01.03.2024**

## பெயர் மாற்றம்

பெயர் VARALAXMI JAYARAMAN, 32/10, என்ஜிஓ காலனி, திண்டிவனம் 604001 விழுப்புரம் தமிழ்நாடு. இனி பெயர் VARALAKSHMI JAYARAMAN என்று அழைக்கப்படுகிறேன்.

## பெயர் மாற்றம்

நான், S.MUKASH S/o. Sivakumar பிறந்ததேதி: 18/10/2006 நெ. 29 A/5 ஸ்ரீ ராகவேந்திரா தெரு, சென்னை மெயின் ரோடு, பொன் அண்ணாமலை நகர், திருவாமாத்தூர், விழுப்புரம், என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி S. MUKESH என்று அழைக்கப்படுகிறேன்.

S.MUKASH

## பெயர் மாற்றம்

AMIRTHA D/O.SIVAKUMAR, பிறந்த தேதி: 26..03.2007, நெ.35, நடராஜா நகர், 2வது குறுக்கு தெரு, விபீஷ்ணபுரம், உ சுப்பூர்,கடலூர், தமிழ்நாடு 608401 என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி AMIRTHA USHARANI SIVAKUMAR (AMIRTHA U.S)என்று அழைக்கப்படுகின்றார்.

SIVAKUMAR தந்தை

## பெயர் மாற்றம்

**old given name: HANUSJA , Surname : JAYARAMAN SARATHI ,** பிறந்த தேதி : 17.11.2011, எண்.3, பிளாட் H, 5வது தளம், பிளாக்4, பார்க் அவென்யூ, கண்டிகை, காஞ்சிபுரம் 600048, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **new given name: HANSUJA NEW Surname: SARATHI JAYARAMAN** என்று அழைக்கப்படுகிறேன்.

**SARATHI JAYARAMAN**
(தந்தை)

## பெயர் மாற்றம்

**old given name: SAI KARTHIKEYA , Surname : JAYARAMAN SARATHI ,** பிறந்த தேதி : 07.04.2016, எண்.3, பிளாட் H, 5வது தளம், பிளாக்4, பார்க் அவென்யூ, கண்டிகை, காஞ்சிபுரம் 600048, என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **new given name: SAI KARTHIKEYA, Surname: SARATHI JAYARAMAN** என்று அழைக்கப்படுகிறேன்.

**SARATHI JAYARAMAN**
(தந்தை)

## பெயர் மாற்றம்

E. S. அன்றில் (E. S. ANDRREL), த/ பெ. பா. இளந்தமிழ் ஆர்வலன், பிறந்த தேதி 16 ஜூலை 2005 (சொந்த மாவட்டம்: சென்னை), 2/5, ஹோம் ஃபைண்டர்ஸ் எஸ்டேட், 75/2, திருவள்ளுவர் சாலை, இராமாபுரம், சென்னை-600089ல் வசிக்கும் நான் இது முதல் அன்றில் இளந்தமிழ் ஆர்வலன் சங்கீதா (ANDRREL ELANTAMIL ARVALAN SANGEETHA) என்று அழைக்கப் படுகிறேன்.

E. S. அன்றில்

**மேன்மைமிகு திண்டிவனம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் எண்2 அவர்கள்சமூகம்**

O.S. No. 382/2023

புதுச்சேரி, கவுண்டன்பாளையம், வழுதாவூர்ரோடு, நெ. 133எல் வசிக்கும்பெருமாள்செட்டியார்குமாரர்ஏழுமலை சீனுவாசன்1, புதுச்சேரி,கவுண்டன்பாளையம்,வழுதாவூர்ரோடு, நெ. 133ல் வசிக்கும்பெருமாள்செட்டியார் குமாரர் ரவி2 ... வாதிகள்

எதிர்

புதுவை12, குருசுக்குப்பம், பத்மினி நகர், 2வது தளம், பிரான்சிஸ்சேவியர்தெரு, நெ. 12ல் இயங்கி வரும்ஆத்ம நிகேதன்ஆசிரமம் டிரஸ்ட்ரெப்பை அதன்தற்காலமுதல்வர்(D1), புதுவை12, குருசுக்குப்பம், பத்மினி நகர், 2வது தளம், பிரான்சிஸ்சேவியர்தெரு, நெ. 12ல் இயங்கி வரும்ஆத்ம நிகேதன்ஆசிரமம் டிரஸ்ட்ரெப்பைஅதன்தற்கால டிரஸ்டி(D2)

1,2பிரதிவாதிகள்

1,2 பிரதிவாதிகளுக்குஅறிவிப்பு

மேற்படி நெம்பர்வழக்கின் வாதிகள், பிரதிவாதிகள் பேரில் உரிமை விளம் புகைக்கும், நிரந்தர தடையுத்தரவுக்கும் மற்றும் சன்ப்ப் ஹய்க் யர்ண்க் பரிகாரம் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கில் 1,2 பிரதிவாதிகள் ஆகிய தாங்கள் ஆஜராக வாய்தா 03.06.2024 அன்று வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 1,2 பிரதிவாதிகளாகிய தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் சமூகம் நீதி மன்றத்தில் வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு முன்னிலையாக தெரிவிக்க வேண்டியது. தவறினால் தங்களுக்கு எதிராக எதிரவரில்லா உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை தாங்கள் இதன் மூலம் அறியவும்.

R.ஸ்ரீநிவாசன் B.Com., B.L.,
P.மகேஷ் B.Sc., B.L.,
வழக்கறிஞர்கள்,
திண்டிவனம்.

## NOTICE OF LOSS OF SHARE CERTIFICATES

Notice is hereby given that the below mentioned Share Certificate(s) issued by M/S Shriram Finance Limited has been lost/misplaced.

| Folio no | Certificate No. | Distinctive No | No. of Shares |
|---|---|---|---|
| 72446 | 602121 | 66320062- 66321186 | 1125 |

Due notice thereof has been given to the Company and We have applied to the Company for the issue of Duplicate Share Certificate.

The public is hereby warned against purchasing or dealing in any way with the above Share Certificate. Any Person who has any claim in respect of the said Share Certificate(s) should lodge such claim with Shriram Finance Limited, Sri Towers, 14A, South Phase, Industrial Estate, Guindy, Chennai – 600 032 or its Share Transfer Agents, Integrated Registry Management Services Pvt Limited, "Kences Towers", 2nd Floor, No.1 Ramakrishna Street, North Usman Road, T Nagar, Chennai – 600 017, within 15 days of publication of this notice, else the Company will proceed to issue duplicate certificate(s), without further intimation.

Place : CHENNAI
Date : 08/05/2024

Name of the share holder(s)
JANAKIRAMAN G(DECEASED)
MALA JANAKIRAMAN
NO 3, MYLAI RANGANATHAN STREET, T NAGAR,-600017

## விவ்ரிடி கேபிடல் லிமிடெட்

(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN-U65929TN2017PLC117196

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஐக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 2வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனித்த நிதிநிலை முடிவுகள்**

**[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]**

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 30,290.57 | 19,698.13 | 102,396.88 | 65,315.13 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | 8,187.04 | 5,644.57 | 25,535.50 | 17,284.47 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 8,187.04 | 5,644.57 | 25,535.50 | 17,284.47 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 6,308.33 | 4,256.05 | 19,125.95 | 12,929.75 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 6,847.73 | 4,564.76 | 19,639.33 | 12,420.53 |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,766.21 | 1,708.12 | 1,766.21 | 1,708.12 |
| 7. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 47,103.12 | 24,780.72 | 47,103.12 | 24,780.72 |
| 8. | பங்கு பிரீமியம் கணக்கு | 131,429.10 | 120,983.51 | 131,429.10 | 120,983.51 |
| 9. | நிகர மதிப்பு | 189,392.45 | 156,474.55 | 189,392.45 | 156,474.55 |
| 10. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 703,203.76 | 501,988.84 | 703,203.76 | 501,988.84 |
| 11. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - | - | - |
| 12. | கடன் பங்கு விகிதம் | 3.48 | 3.07 | 3.48 | 3.07 |
| 13. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது | ஆண்டு விகிதம் செய்யப்பட்டது |
| | 1. அடிப்படை | 6.59 | 4.53 | 20.10 | 13.91 |
| | 2. டைலூட்டட் | 6.46 | 4.42 | 19.71 | 13.57 |
| 14. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil |
| 15. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil | Nil | Nil |
| 16. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA | NA |
| 17. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA | NA | NA |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (URL : www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivriticapital.com) ஆகியவற்றில் கிடைக்கும்..
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக
(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
ஒப்பம் / –
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : 09 மே 2024

## விவ்ரிடி கேபிடல் லிமிடெட்

(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN-U65929TN2017PLC117196

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஐக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 2வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**மார்ச் 31, 2024 அன்று முடிவடைந்த ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகள்**

**[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]**

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | மார்ச் 31, 2024ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) | மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 107,931.20 | 68,807.66 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | 25,777.89 | 17,791.36 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 25,777.89 | 17,791.36 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | 19,305.50 | 13,489.10 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | 814.68 | (12,916.58) |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,766.22 | 1,708.12 |
| 7. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | 150,231.38 | 146,552.16 |
| 8. | பங்கு பிரீமியம் கணக்கு | 133,559.78 | 123,097.34 |
| 9. | நிகர மதிப்பு | 300,239.99 | 285,995.32 |
| 10. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 706,994.47 | 502,585.46 |
| 11. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | - | - |
| 12. | கடன் பங்கு விகிதம் | 2.27 | 1.70 |
| 13. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்) (இடைக்கால காலத்திற்கு ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | | |
| | 1. அடிப்படை | 0.34 | (13.09) |
| | 2. டைலூட்டட் | 0.33 | (13.09) |
| 14. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | Nil | Nil |
| 15. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | Nil | Nil |
| 16. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | NA | NA |
| 17. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | NA | NA |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE : www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivriticapital.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி கேபிடல் லிமிடெட்டுக்காக
(முன்பு விவ்ரிடி கேபிடல் பிரைவேட் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
ஒப்பம் / –
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : 09 மே 2024